1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேர்மாளத்திலே உள்ள அரசு பட்டு வளர்ப்பு பண்ணையில் இருக்கக்கூடிய தொழில் நுட்ப அலுவலர்கள் பட்டு வளர்ப்புப் பகுதி அனைத்துக்கும் சென்று, அங்கிருக்கக்கூடிய விவசாயிகளைச் சந்தித்து, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற அவர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளைப் போக்கு கின்ற வகையிலே நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள், அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு பகுதியிலே இருந்தும் குறிப்பிட்ட சில விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, (குறிப்பாக 41 விவாயிகள்) அந்தப் பகுதியில், பல்வேறு பகுதிகளிலேயிருந்து தேர்ந்தெடுத்து புழு வளர்ப்பு, பூச்சி மருந்து தெளிப்பு போன்ற பயிற்சிகள் ஒரு மாதம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அந்த ஒரு மாதம் பயிற்சியின் போது அவர்களுக்கு மானியமாக 150 ரூபாய் தரப் படுகிறது. பயிற்சி முடிந்து வெளியேறுகிற அந்த விவசாயிகளுக்கு 150 ரூபாய் மதிப்புள்ள புழு வளர்ப்பு சாதனங்கள் மற்றும் மற்ற கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியாக விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, இப்படி ஒவ்வொரு மாத பயிற்சி மானியத்தோடு அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு இந்தத் துறையின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

(9-55 மணி)

லாரி மூலம் குடிதண்ணீர்.

*3031 திரு. பெ. ஆசையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆண்டிப்பட்டி பேரூர் பொதுமக்களுக்கு லாரி மூலமாக குடிதண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

ஆண்டிப்பட்டி பேரூராட்சி மக்களுக்கு தற்போது போதுமான அளவில் குடிநீர் கிடைப்பதால் லாரிமூலம் குடிநீர் வழங்க அவசியம் எழவில்லை.

மதுரையில் செவிலியர் கல்லூரி.

* 5207 திரு. இரா. சாமிநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் அமைச்சர் துறை கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் செவிலியர் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

திரு. இரா. சாமிநாதன்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சென்னை அரசு பொது மருத்துவமனையில் ஒன்றும், வேலூரில் சி.எம்.சி. கல்லூரி தனியார் மருத்துவமனையில் ஒன்றும், ஆக இரண்டு செவிலியர் பயிற்சி கல்லூரிகள்தான் இருக்கின்றன. எனவே, தென் மாவட்டங்களில் மதுரையை மையமாக வைத்து. மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் முதுகலை மருத்துவப் பட்டப்படிப்பு இருப்பதால், அங்கே ஒரு செவிலியர் பயிற்சிக் கல்லூரி அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, நான்கு தனியார் கல்லூரிகளும் இதிலே இயங்கி வருகின்றன. செவிலியர் கிருத்துவ மருத்துவக்கல்லூரி, ஸ்ரீஇராமகிருஷ்ணா இன்ஸ்டிடியூட் ஆப் சயன்ஸ், கோயமுத்தூர், செவிலியர் கல்லூரி, திண்டுக்கல். ஹோலிகிராஸ் செவிலியர் கல்லூரி, திருச்சி ஆகிய இடங்களில் இந்தப் பயிற்சிகள் நடை பெற்று வருகின்றன. அந்தக் கல்லூரிகளில் 155 மாணவியர்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். ஆகவே, புதியதாக துவக்குவது பற்றிய கருத்து அரசிடம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இரா. சாமிநாதன்; தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரி மற்றும் ஒன்று மதுரையில் துவக்க வேண்டும் என்பதற்காக, குறிப்பாக உலகப் பொதுச் சுகாதார நிறுவனத்தினுடைய தீர்மானம்—வருகிற கி.பி. 2000 ஆண்டிற்குள் அனைத்து தரப்பு மக்களுக்கும் மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. ஆகவே, அதைக் கருத்திற்கொண்டு தமிழ் நாட்டில் அரசு செவிலியர் பயிற்சி கல்லூரி ஆரம்பிப்பதற்கு மதுரையை மையமாக வைத்து தேர்ந்தெடுக்க அரசு கருத்தில் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இந்தத் தனியார் கல்லூரிகள் எல்லாம் அரசின் அனுமதியில்லாமல் இந்தப் பயிற்சியை கூட நடத்தி வருகின்றன. அவை எல்லாம் முடிவு பெற்றபின், தேவை ஏற்படின், இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.